# 4.0 - கடந்த கால பல்தேர்வு வினாக்கள்



The National e-learning Portal for The General Education

Start Your Learning Journey with e-thaksalawa

# கடந்த கால பல்தேர்வு வினாக்கள்

1. அத்தியாவசியமான மா போசணை மூலகங்களில் ஒன்று

1. Cl 2. B 3. S 4. Mn 5. Fe

கார மண்ணில் அதிகளவில் கிடைக்கத்தக்க நுண்போசணை மூலகங்களில் ஒன்று

1. Mo 2. Mg 3. Cu 4. Zn 5.Ni

அவரைத் தாவரங்களில் நைதரசன் பதித்தல் செயற்பாட்டில் உதவுகின்ற உதவுகின்ற உதவு போசணை மூலகம் எது

1. Na 2. Co 3. Si 4. I 5.Al

முதிர்ந்த தாவர இழையங்களில் இருந்து இளம் இழையங்களை நோக்கி கடத்தப்படாமையால் இளம் பாகங்களிலே குறைபாட்டு அறிகுறி தென்பட காரணமான மூலகங்களில் ஒன்று

1. Mg 2. Mn 3. P 4. K 5.Cl

PH-4 இலும் குறையும் போது எம் மூலகக் கூட்டங்களில் கரைதிறன் அதிகரிப்பதனால் தாவரங்களிற்கு நச்சுத்தன்மையை ஏற்படுத்தும்

1. Al, Fe, Mn 2. Al, Fe, P 3. Mg, Mn, Al

4. Mn, Mg, Cd 5.Mn, P, Mg

இலிப்பிக்கின் இழிவு விதிக்கேற்ப ஒரு தாவரத்தின் வளர்ச்சி மட்டுப்படுத்தப்படுகின்றமைக்கு காரணம் போசணை

1. மண்ணில் குறைந்த அளவில் இருக்கின்றமை
2. தாவரங்களிற்கு குறைந்த அளவில் தேவைப்படுகின்றமை
3. தாவரங்களிற்கு அதிகளவில் தேவைப்படுகின்றமை
4. தாவரங்களிற்கு அவசியமான குறைந்த பட்ச அளவில் தேவைப்படுகின்றமை
5. மண்ணில் அதிக அளவில் இருக்கின்றமை

தொகுப்பு : திருமதி. N. வசந்தன், உதவிக் கல்விப் பணிப்பாளர் - தொழில்நுட்பம், (ZEO - கிளிநொச்சி)

கணினி வடிவமைப்பு : திரு.சி.உமாகாந்தன், ஆசிரியர் - த,தொ,தொ, (யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி )

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

மண்ணுக்கு சேதனப் பசளையிடும் போது தாவரங்களுக்குப் போசணைப் பொருட்கள் கிடைப்பதற்காக குறித்த செயன்முறைக்கு உள்ளாகுதல் வேண்டும் இச் செயன்முறை

1. நைத்திரேற்றம்
2. தாழ்த்தல்
3. ஒட்சியேற்றம்
4. நற்போசனையாக்கம்
5. கனியவாக்கம்

சேதனப் பசளைகளை பயன்படுத்துவதன் அனுகூலம் ஒன்று

1. மண்ணில் நீர் பற்று திறனை மேம்படுத்தல்
2. மண்ணுக்கு தேவையான அளவு நைதரசனை வழங்கல்
3. மண்ணுக்குள் தாவரப் போசணைப் பொருட்களை விரைவாக வெளிவிடுதல்
4. மண்ணுக்கு தேவையான அளவு பொசுபரசை வழங்கல்
5. மண்ணின் PH ஐ 7 இலும் அதிகரித்தல்

மண்ணில் பொசுபரசு தாவரங்களுக்கு கிடைக்கப் பெறாமைக்கான காரணம்

1. உயர் பொசுபரசு நீரில் கரைய முடியாத வடிவில் மாற்றப்படுவதனாலாகும்
2. பொசுபரசு இலகுவான ஆவியாக்கப்படுவதால் ஆகும்
3. உயர் வெப்பநிலையில் பொசுபரசு படிவு அடையச் செய்வதனால்
4. பொசுபரசு நீரில் உடனடியாக முடியாததானலாகும்
5. மண் சூழ்நிலைகள் பொசுபரசை உறிஞ்சப்படுவதனாலாகும்

மண் நுண்ணங்கிகளின் தொழிற்பாட்டிற்கும் மண் pH பெறுமானத்திற்கு மிடையிலான தொடர்பை காட்டும் சரியான கூற்று

A. நைதரசன் பதிக்கும் பற்றீரியாக்களுள் பெரும்பாலானவை அதிக அமிலத்தன்மை காணப்படும் போது தொழிற்படுவதில்லை

B. நுண்ணங்கிகளால் சேதன பதார்த்தக்கள் பிரிக்கப்படுவதனால் உற்பத்தியாகும் சேதன அமிலங்கள் சில கரையாத நிலைக்கனியங்களை கரையத்தக்க நிலைக்கு மாற்றும்

C. சேதன அமிலங்களின் தாங்கல் தொழிற்பாட்டால் மண் PH சிறப்பு நிலையில் பேணப்படும்

1. A,B சரி
2. B,C சரி
3. A,C சரி
4. A,B,C சரி
5. A,B, C பிழை

மிகையான பசளைப் பயன்பாட்டால் நீர் நிலைகளில் தாவரங்களின் குடித்தொகை அதி-கரிப்தனால் நீர்வாழ் அங்கிகள் மீது பாதகமான விளைவு ஏற்படல் எவ்வாறு அழைக்கப்படும்

1. நற்போசணையாக்கம்
2. சமநிலை போசணைப்பயன்பாடு
3. நீர் நிலைகளில் மண் நிரம்புதல்
4. மண்ணில் கல்சியம் அதிகரிப்பு
5. கிரஸ்ரேசிக்களின் இறப்பு

தொகுப்பு : திருமதி. N. வசந்தன், உதவிக் கல்விப் பணிப்பாளர் - தொழில்நுட்பம், (ZEO - கிளிநொச்சி)
கணினி வடிவமைப்பு : திரு.சி.உமாகாந்தன், ஆசிரியர் - த,தொ,தொ, (யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி )
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

முனையரும்பின் இளம் இலைகளில் முதலில் வளைந்து இறுதியில் அந்தம் மற்றும் விளிம்புகளிலிருந்து பின்னோக்கி இறக்கும், உச்சி விகாரமடையும் மேற்படி குறைபாட்டு அறிகுறிக்கும் பொறுப்பான மூலகம் எது

1. P 2. K 3. Fe 4. Mg 5. Ca




மேற்குறிப்பிட்ட வரைபில் சிறப்பான அளவு பசளை கிடைக்கப் பெற்று தாவரங்கள் உச்ச வளர்ச்சியையும் விளைச்சளையும் குறிப்பிடும் வலயம் எது

1. 1 2. 2 3. 3 4. 4 5. 5

மண்ணில் இருந்து போசணைப் பதார்த்தங்கள் அகற்றப்படும் முறை அல்லாதது

1. மண்ணரிப்பு 2. நீர் முறை அரித்தல் 3. ஆவியாதல்
4. நைதரசன் பதித்தல் 5. பயிர்ச்செய்கை

முப்பை சுப்பர் பொஸ்பேற்றில் அடங்கியுள்ள $P_2O_5$ இன் அளவு யாது

1. 30 - 35% 2. 40 - 45% 3. 45 - 50%
4. 50 - 35% 5. 55 - 60%

பின்வரும் பண்ணைப் பசளைகளில் ஒப்பீட்டளவில் அதிகளவு நைதரசனைக் கொண்ட பசளை

1. எருமைச் சாணம் 2. கோழி எரு 3. ஆட்டெரு
4. பசுவின் சாணம் 5. பன்றி எரு

உயிரிப்பசளை தயாரிப்பில் பயன்படுத்தப்படும் அசொல்லா

1. ஒரு பக்ரிறியா 2. ஒரு சயனோபக்ரிறியா 3. ஒரு பன்ன தாவரம்
4. ஒரு வகை வேர்பூஞ்சண கூட்டம் 5. ஒரு வகை பங்கஸ்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

கலவைப் பசளை ஒன்றில் 12:10:8 எனப் பெயரிடப்பட்டுள்ளதை தர்பட்ட கூற்றை அடிப்படையாகக் கொண்டு அடுத்த இரு வினாக்களுக்கு விடை தருக

மேற்படி கலவை குறிப்பிடுவது

1. 12%N, 10%K, 8%P கொண்டுள்ளது
2. 12%N, 10%$P_2O_5$, 8%$K_2O$ கொண்டுள்ளது
3. 12%N, 10%$P_2O_5$, 8%K கொண்டுள்ளது
4. 12%$P_2O_5$, 10%$K_2O_1$, 8%$P_2O_5$ கொண்டுள்ளது

மேற்படி கலவையை பயன்படுத்தி விவசாயி ஒருவர் தனது 1000$m^2$ பயிர்ச் செய்கை நிலத்திற்கு நைதரசனை 100$m^2$ க்கு 0.1Kg வீதம் பிரயோகிக்க விரும்பினால் இதற்கு தேவையான உரத்தின் அளவு Kg யாது?

1. 8.33 2. 9.33 3. 10.33 4. 11.33 5. 12.33

காபன், ஐதரசன், ஒட்சிசன் குறைபாட்டு அறிகுறியை தாவரங்கள் ஒரு போதும் காட்டுவதில்லை ஏனெனில்

1. சேதன பசளைகள் மூலம் மண்ணுக்கு கிடைப்பதனால்
2. அசேதன பசளைகள் மூலம் மண்ணுக்கு கிடைப்பதனால்
3. தாவரங்களால் இம் மூலகங்களை மண்ணில் இருந்து
4. வளி மண்டலத்தில் இருந்தும் நீரில் இருந்து தாவரங்களிற்கு கிடைப்பதனால்
5. தாவரங்களினால் இம் மூலகங்களை தொகுக்கப்படும்

பயிர்ச் செய்கையில் தேறிய நீர்ப்பாசனத் தேவை 16cm ஆகவும் இழந்த நீரின் அளவு 4 cm ஆகவும் இருப்பின் நீர்ப்பாசன வினைத்திறனைக் காண்க

1. 70% 2. 75% 3. 80% 4. 85% 5. 90%

பொசுபரஸ் பசளை வகையொன்றினை மரக்கறிப் பயிர்ச்செய்கை ஒன்றிக்கு இடம் பெறும் போது தாவர வளர்ச்சிக்கு தேவையான போசணையளவு 200Kg/ha ஆகவும் மண்ணிலிருந்து பெறக்கூடிய போசணையளவு 100Kg/hg எனவும் பசளை வினைத்திறன் 10% ஆகவும் இருப்பின் மண்ணிற்கு இடவேண்டிய பசளையின் அளவு யாது

1. 1000kg/ha 2. 1500kg/ha 3. 2000kg/hg
4. 2500kg/hg 5. 3000kg/ha

கூட்டெரு தயாரிப்பதற்கு உகந்த மூலப்பொருட்களில் போசணைப் பெறுமானம் குறைந்த மூலப்பொருள் பின்வருவனவற்றுள் எது

1. விலங்குக் கழிவு 2. மரத்தூள் 3. மரச்சாம்பல்
4. பயிர் மீதிகள் 5. புற்கள்


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

பின்வருவனவற்றில் எப் போசணை மூலக அதிகரிப்பு காரணமாக நைதரசன் அகத்துறிஞ்சல் குறைவடைந்து முதிர்ச்சி துரிதமடைந்து இனப்பெருக்க பருவத்தை அடைதல் நடைபெறும்

1. P 2. K 3. N 4. S 5.Fe

பூரணமற்ற கலவை பசளை பற்றிய சரியான கூற்று

1. N,P,K ஆகிய மூன்று மூலகங்களையும் கொண்டதாக காணப்படும்
2. நெற் செய்கைக்கு பயன்படுத்தப்படும் மேற்கட்டுப் பசளைக் கலவையாக TDM ஒரு பூரணமற்ற கலவையாகும்
3. தெங்கு செய்கையில் பயன்படுத்தப்படும் மேற்கட்டுப் பசளையாகிய CRI கலவை ஒரு பூரணமற்ற கலவையாகும்
4. தனியொரு மூலகத்தை மட்டும் கொண்ட பசளையாகும்
5. அத்தியாவசிய மூலகங்கள் அனைத்தையும் கொண்ட பசளையாகும்

கூட்டெரு தொடர்பாக பின்வரும் கூற்றுக்களுள் மிகச் சரியானது எது

1. சேதனப் பொருள்களின் பிரிகை முக்கியமாக பற்றீரியாவினாலும் அக்ரினோமைசெற்றேசாலும் மேற்கொள்ளப்படுகிறது
2. கூட்டெருச் செயன்முறை பிரதானமாக பங்கசுகளினால் மேற்கொள்ளப்படும்
3. கூட்டெருச் செயன்முறையை $80^{o}C$ இலும் உயர்வான வெப்பநிலை மேம்படுத்தும்
4. கூட்டெருச் செயன்முறை பாறைப் பொசுப்பேற்றின் கரைதிறனைக் குறைக்கும்
5. கூட்டெரு ஆக்கும் காலத்தில் உயர் CiN விகிதத்துடன் உள்ள பொருள்கள் விரைவாக பிரிகையடையும்

தாவரங்களில் கடும் பச்சை, செவ்வூதா நிறமுள்ள இலைகள், வேர் வளர்ச்சி குன்றல் போன்ற குறைபாட்டு அறிகுறிகள் ஏற்படுவது

1. Mg குறைவது 2. Ca குறைவது 3. Fe குறைவது
4. Zn குறைவது 5. P குறைவது

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk